சேதமடைந்த சாலைகளை சீரமைக்கக் கோரிக்கை



சேதமடைந்துள்ள அலிவலம் சாலை.

திருவாரூர், நவ. 10: திருவாரூரில் மழையால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருவமழையால் திருவாரூரில் உள்ள சாலைகள் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றன. குறிப்பாக, கிராமப் பகுதிகளுக்குச் செல்லும் சாலைகள், குண்டும் குழியுமாக மாறி வாகன ஓட்டிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. திருத்துறைப்பூண்டி சாலையில் புலிவலம் பகுதியில் மிகவும் மோசமான நிலையில் சாலை பாதிக்கப்பட்டிருப்பதால் வாகன ஓட்டிகளுக்கு சிரமம் ஏற்படுவதுடன், அவ்வப்போது போக்குவரத்து பாதிப்பும் ஏற்படுகிறது. குறிப்பாக, காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, மாணவர்கள், வேலைக்குச் செல்வோருக்கு சிரமத்தை ஏற்படுத்துகின்றன.

இதேபோல, அலிவலம் செல்லும் சாலை தப்ளாம்புலியூர் வரை மிகவும் சேதமடைந்து போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. மழைக்காலம் தீவிரமடையும் நிலையில், சாலைகளின் பாதிப்பு மேலும் அதிகரிக்கும் என வாகன ஓட்டிகளிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. தவிர கிராமப் பகுதிகளுக்குச் செல்லும் பெரும்பாலான சாலைகள் சேதமடைந்துள்ளன. எனவே, சேதமடைந்த சாலைகளை விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆதார் எண்ணுடன் வங்கிக் கணக்கு இணைப்பு: உறுதி செய்ய அறிவுறுத்தல்

திருவாரூர், நவ. 10: திருவாரூர் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர், ஆதார் எண்ணுடன் வங்கிக் கணக்கு இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம், இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், இந்திரா காந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு ஓய்வூதியத் தொகையை, SNA-SPARSH முறையின் கீழ் ஆதார் அடிப்படையிலான நேரடி பயன் பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கும் நடைமுறை செயல்படுத்தப்படுகிறது.

மேலும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இதர ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு, Global Beneficiary Master முறையின் மூலம் ஓய்வூதியத் தொகை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கும் நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த பணப்பரிமாற்ற நடைமுறைகளில், பயனாளிகளின் பெயர், ஆதார் விவரம், வங்கிக் கணக்கு விவரங்கள் சரியாகவும், ஒன்றுக் கொன்று ஒத்துப்போகும் வகையிலும் இருப்பது மிகவும் அவசியம். குறிப்பாக, SNA-SPARSH முறையின் கீழ் அடிப்படையிலான நேரடி பணப்பரிமாற்றமுறை வங்கிக் கணக்கில் செயலாக்கபடுவதையும், பயன் பரிமாற்றம் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுவதால், பயனாளியின் ஆதார் எண்ணுடன் வங்கிக் கணக்கு இணைக்கப்பட்டிருப்பதையும் உறுதி செய்வதை, முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட ஓய்வூதியங்களுக்கு விண்ணப்பிப்போர் தவறாமல் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

வலங்கைமான் ஒன்றிய பகுதிகளில் ஆட்சியர் ஆய்வு

நீடாமங்கலம், நவ.10 : வலங்கைமான் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

வலங்கைமான் வட்டம், ஆலங்குடி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் செயல்படும் இ-சேவை மையத்தில், மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள், ஆலங்குடி நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருள்களின் இருப்பு விவரம் மற்றும் தரம் குறித்தும், கண்டியூர் ஊராட்சியில் வட்டார நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளதையும், கண்டியூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில், பராமரிக்கப்பட்டுவரும் பதிவேடுகளையும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

வலங்கைமான் அரசு துணை சுகாதார நிலையத்தில், நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை விவரம் குறித்தும், மருத்துவப் பொருள்களின் இருப்பு விவரம் குறித்தும் மருத்துவர் மற்றும் செவிலியரிடம் கேட்டறிந்தார்.



கண்டியூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பதிவேடுகளைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் வ .மோகனச்சந்திரன்.

ஆய்வின்போது வலங்கைமான் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரகாஷ், நமச்சிவாயம், உதவி பொறியாளர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

சம்பா பயிர்க் காப்பீட்டுத் தேதியை நீட்டிக்கக் கோரிக்கை

திருவாரூர், நவ. 10: சம்பா பயிர்க் காப்பீடு செய்வதற்கான தேதியை நீட்டிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சிபிஎம் மாநிலக் குழு உறுப்பினர் ஐவி. நாகராஜன் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனு: நிகழாண்டுக்கான சம்பா பருவ பயிர்க் காப்பீடு செய்வதில், விவசாயிகளுக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காப்பீடு செய்வதில் யார் பெயரில் நில உடமை பட்டா இருக்கிறதோ அவர்கள் மட்டுமே காப்பீடு செய்ய இயலும். மேலும் விவசாயிகளின் ஐடி எண் அவசியம் என்று கணினி மையத்தில் கூறுகின்றனர். இதனால் பல விவசாயிகள் காப்பீடு செய்ய இயலவில்லை.

பூர்வீக நிலம் தாத்தா, அப்பா பெயரில் பட்டா உள்ளவர்களால் காப்பீடு செய்ய இயலவில்லை. அத்துடன், குத்தகை சாகுபடி செய்பவர்கள் நிலங்களின் பட்டா, உரிமையாளர் பெயரில் இருக்கும். எனவே, குத்தகை சாகுபடி செய்பவர்களாலும் காப்பீடு செய்ய இயலவில்லை. தங்கள் பெயரில் பட்டா இல்லாதவர்களால் விவசாயிகளின் ஐடி பெற இயலவில்லை.

ஒவ்வொரு கிராமத்திலும் இதுபோல 75 சதவீத விவசாயிகள் மிகுந்த பாதிப்படைந்து மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றனர். தவிர, நவ.15 ஆம் தேதி காப்பீடு செய்ய கடைசி நாள் என்று கூறுகின்றனர். நிகழாண்டு, தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதித்த நிலையில், கடந்த ஆண்டைப் போல பயிர்க் காப்பீடு செய்ய கால நீட்டிப்பு செய்து, அனைத்து விவசாயிகளும் பயன் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வைத்தீஸ்வரன்கோவிலில் கந்த சஷ்டி விழா தொடக்கம்



சீர்காழி, நவ. 10: சீர்காழியை அடுத்த வைத்தீஸ்வரன்கோவிலில் கந்த சஷ்டி விழா சிறப்புப் பூஜைகளுடன் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

வைத்தீஸ்வரன்கோவிலில் தருமபுரம் ஆதீனத்திற்கு உட்பட்ட தையல்நாயகி அம்பாள் உடனாகிய வைத்தியநாதர்சுவாமி கோயில் அமைந்துள்ளது. இக் கோயிலில் முருகப்பெருமான் செல்வமுத்துக்குமாரசுவாமி சிறப்பு அலங்காரத்தில் கிருத்திகை மண்டபம் எழுந்தருளினார். அங்கு சிறப்பு வழிபாடு, சண்முகார்ச்சனை செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். சூர சம்ஹாரவிழா வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நவ. 20-இல் நாகை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை

நாகப்பட்டினம், நவ. 10: நாகூர் கந்தூரி விழாவையொட்டி, நாகை மாவட்டத்தில் செயல்படும் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு நவ.20-ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, நாகை மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன் குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நாகூர் தர்கா ஷரிப் பெரிய கந்தூரி விழா நவ.10 முதல் நவ.23-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதையொட்டி மாவட்டத்தில் செயல்படும் மாநில அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் (தேர்வுகளுக்கு இடையூறு இல்லாமல்) விழாவின் முக்கிய நாளான நவ.20 ஆம் தேதி சந்தன கூடு ஊர்வலம் நடைபெறுகிறது.

இதனால் அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அளித்தும், அதை ஈடுசெய்யுடிச.5-ஆம் தேதி வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

மத்தியப் பல்கலை. குடியிருப்பில் 7 வீடுகளில் பணம், நகை திருட்டு

நன்னிலம், நவ. 10 : தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக குடியிருப்பு வளாகத்தின் 7 வீடுகளில் கதவுகளை உடைத்து நகை, பணம் திருடப்பட்டது திங்கள்கிழமை இரவு தெரியவந்தது.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், நீலக்குடியில் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இங்கு நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அலுவலர்கள் மற்றும் பேராசிரியர்கள் தங்குவதற்காக பல்கலைக்கழகம் அருகில் உள்ள நாகக்குடி கிராமத்தில் குடியிருப்புகள் உள்ளன. இந்த குடியிருப்புகளில் 100-க்கும் மேற்பட்ட பேராசிரியர்களும், அலுவலர்களும் வசித்து வருகின்றனர்.



தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக குடியிருப்பு வளாகத்தில் உள்ள ஒரு வீட்டில் உடைக்கப்பட்ட பீரோ.

தீபாவளி பண்டிகையையொட்டி பல பேராசிரியர்கள், அலுவலர்கள் தங்களது சொந்த ஊருக்கு சென்றுவிட்டு திங்கள்கிழமை இரவு ஊருக்கு திரும்பியுள்ளனர். இதில் சிலர் தங்களது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, பீரோக்களில் இருந்த பொருள்கள் திருடு போனது கண்டு அதிர்ச்சியடைந்து, நன்னிலம் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வரும் பாலாஜி, வித்யா, பிரித்தி உள்பட 7 பேரின் வீடுகளில் திருட்டு நடந்துள்ளது.

பேராசிரியர் பாலாஜி வீட்டிலிருந்த 10 பவுன் நகைகள், ரூ.1.75 லட்சம் ரொக்கம், ரூ.40 ஆயிரம் மதிப்புள்ள கைகடிகாரம் ஆகிய பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அருகில் உள்ள மற்றொரு வீட்டில் இருந்து அமெரிக்க டாலர்கள், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் திருடு போயுள்ளன.

நன்னிலம் போலீஸாரின் முதல் கட்ட விசாரணையில் ரொக்கம், நகைகள் பல லட்சம் மதிப்புள்ள பொருள்கள் திருட்டுப் போயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. எனினும், எஞ்சிய வீடுகளில் இருந்தவர்கள் ஊருக்கு திரும்பி வந்த பிறகே, திருட்டுப் போன ரொக்கம், பொருள்களின் மதிப்பு தெரியவரும் என்று போலீஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார்குடியில் நாளை மாற்றுத்திறனாளிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர், நவ. 10: மன்னார்குடியில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு குறைதீர் வியாழக்கிழமை (நவ.12) நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில், வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மன்னார்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கையை மனுவாக அளிக்கலாம். மனுதாரர்களின் கோரிக்கைகள் அரசின் விதிகளுக்கு உள்பட்டு பரிசீலிக்கப்படுவதுடன், குறைகளுக்கு தீர்வு காணும் வகையில் உள்ள மனுக்களுக்கு உரிய உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். உதவி உபகரணங்கள், கடனுதவி, பராமரிப்பு உதவித்தொகை, மனைப் பட்டா, பட்டா இருப்பின் தொகுப்பு வீடு கோருபவர்கள், நூறு நாள் அட்டை கோருபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கு முன்பு விண்ணப்பம் அளித்திருந்து அதற்கான ஆதாரம், தொடர்புடைய கடிதங்கள் ஏதுமிருப்பின், அதை தவறாமல் கொண்டுவர வேண்டும் என தெரிவித்துள்ளார்.


முருகன் கோயிலில் கந்தசஷ்டி விழா தொடங்கியது

நீடாமங்கலம், நவ. 10: நீடாமங்கலம் கீழத்தெரு முருகன் கோயிலில் கந்தசஷ்டி திருவிழா செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இதையொட்டி, சத்ருசம்ஹார திரிசதி ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர் மற்றும் பரிவாரத் தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இதேபோல, திருநாவுக்கரசரால் தேவாரப் பாடல் பெற்ற பூவனூர் சதுரங்கவல்லபநாதர் கோயிலில் கந்தசஷ்டிவிழா தொடக்கத்தை முன்னிட்டு வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர் சந்நிதிகளில் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. திருஞானசம்மந்தரால் பாடல் பெற்ற ஆலங்குடி ஆபத்சகாயேஸ்வரர் குருபரிகார கோயிலில் எழுந்தருளியுள்ள வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், நீடாமங்கலம் காசிவிசுவநாதர் கோயில், கோகமுகேஸ்வரர் கோயில் உள்ளிட்ட சிவன் கோயில்களில் கந்தசஷ்டி திருவிழா தொடக்கத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. நீடாமங்கலம் ஞானாம்பிகை சமேத கோகமுகேஸ்வரர் கோயிலிலும் கந்தசஷ்டி விழா தொடங்கியது.

ஆட்டோ கட்டண உயர்வுக்கு நன்றி



சீர்காழி, நவ. 10: ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தியதற்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீர்காழி அருகே செங்கமேட்டில் உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்க மயிலாடுதுறை மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம், சங்கத்தின் மாவட்ட பொருளாளர் முத்துராஜ் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பாலமுருகன், மாவட்ட இணை செயலாளர் முகம்மதுரபிக் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக மாநில பொதுச் செயலாளர் சபரிநாதன், மாநில பொருளாளர் காளிமுத்து, மாநில துணைப்பொதுச்செயலாளர் குணசேகரன், தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கர்த்திகேயன், துணை செயலாளர் சுந்தர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், 14 ஆண்டுகளாக உயர்த்தப்படாத ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தப்பட்டதற்கு தமிழக அரசுக்கு நன்றி, ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தியது போன்று கால் டாக்சி மீட்டர் கட்டணமும் உயர்த்த வேண்டும், மேக்ஸி கேப் வாகனங்களுக்கு சீட் பர்மீட்டை உயர்த்தி வழங்க வேண்டும், சொந்தப் பயன்பாட்டு வாகனங்களை பொது போக்குவரத்துக்கு பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், மாவட்ட எல்லை பகுதி உள்ளிட்ட இடங்களில் உள்ள சோதனை சாவடிகளில் வழிப்பறி கொள்ளை போல் மேக்ஸி கேப் வாகனங்களில் சீட்டு அதிகமாக உள்ளது என பல்வேறு காரணங்களை கூறி லஞ்சம் அதிகமாக வாங்குகிறார்கள் அதை அரசு தடை செய்ய வேண்டும் என பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட செய்திதொடர்பாளர் நாகராஜன் நன்றி கூறினார்.

TAMIL NADU STATE AGRICULTURAL MARKETING BOARD
E-Tender Notice
Tender Notice No.T.12 / Sr.DO / F.1157 / 2026 / Dated.10.11.2026
Lumpsum Contract

For and on behalf of the Governor of Tamil Nadu, the Executive Engineer, Tamil Nadu State Agricultural Marketing Board, Guindy, Chennai-32, invites ONLINE tenders for the under mentioned works from the PWD/WRD registered contractors of appropriate class.

Sl NO	Name of Work	Value put to tender (Rs. In Lakhs) Approx.	EMD Rs. (Including GST)
1	Construction of Integrated Agricultural Extension Centre (IAEC) at Katpadi in Vellore District	235.34	2,78,000/-
2	Construction of Integrated Agricultural Extension Centre (IAEC) at Gudiyatham in Vellore District	259.49	3,07,000/-
3	Establishment of 100 MT cold storage at Keeramangalam Block in Pudukottai District	103.50	1,23,000/-

Important dates: 1. Last date and time of receipt of tender through online : 30.11.2026 upto 5:45 PM
2. Downloading the tender document by free of cost : 16.11.2026 to 30.11.2026 upto 5.45 PM
3. Date and time of opening e-Tender : 01.12.2026 from 12.15 PM onwards
4. For further details please visit website https://tntenders.gov.in
5. Period of Completion :- S.No. 1 & 2-12 Months, Sl. No. 3-8 Months.

Note: i) It is the responsibility of the tenderer to check any corrigendum issued for any correction or modification uploaded subsequently in website, the same shall be taken into account while submitting tender.
ii) The Tender Authority does not take any responsibility for the delay / non-submission of tender/non-reconciliation of online payment caused due to non- availability of internet connection, network traffic / holidays or any other reasons.
iii) Tender may be cancelled at any stage by competent authority.
iv) Cost of EMD will be paid through online mode i.e. internet payment gateway (Credit/Debit), Net banking, NEFT/RTGS.

DIPR / 3476 / Tender / 2026

Executive Engineer,
TNSAMB, Chennai - 32.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை
ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை
(முன் தகுதி விண்ணப்பம்) இரு உறை முறை (வரிசை எண்1)

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 07 க.பொ/ கட்டடம் (க&ப) வட்டம்/சிவ /2026-2027/நாள் : 10.11.2026

தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் ஒரு பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ. எண்	வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கிடைக்கும் நாள்	ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள்	பணி காலம் (பருவ காலம் உட்பட)
1	சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாஸ்டர் பிளான் வளாகத்தில் கூடுதல் ஆட்சியர் அலுவலக கட்டிடம் கட்டும் பணி.	ரூ.4087.50	ரூ.20,54,000	16.11.2026, பிற்பகல் 03.00 மணி முதல் 17.12.2026, பிற்பகல் 12.30 மணி வரை	17.12.2026, பிற்பகல் 01.30 மணி முதல்	540 நாட்கள்

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் / மாறுதல்கள் எதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3494 /ஒப்பந்தப்புள்ளி/2026

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா வேது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.74, அண்ணாமலாட்சி டவர், தெற்கு வீதி, வார்டு எண்.2, பிளாக் எண்.38, தெற்கு கிராமம், திருவாரூர், தமிழ்நாடு-610001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புதுடைமுறைவிதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தார்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	07.11.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவனித்தொகை (EMD)
1639210030000002 1.Mr.சண்முகம்.T, 2. Mrs.மலர்கொடி	(I) 13.07.2021 & 23.09.2021 அன்றுள்ளபடி ₹ 9,75,915/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) (ii) அடையாளமான சுவாதீனம் & நேரடியான சுவாதீனம் 14.09.2022 & 14.11.2025	₹ 10,12,181.51 (ரூபாய் பத்து லட்சத்து பன்னிரண்டாயிரத்து நூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா ஐம்பத்து ஒன்று மட்டும்)	₹4,37,000/- (ரூபாய் நான்கு லட்சத்து முப்பத்து ஏழாயிரம் மட்டும்)	₹ 43,700/- (ரூபாய் நாற்பத்து மூன்றாயிரத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம்: நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், திருவாரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S.எண்60/15, நாரணமங்கலம் கிராமம், திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் என்னும் முகவரியில் 100 சதுர மீட்டர் மனை, அதனுடன் RCC கட்டிடம் மற்றும் அனைத்து இதர வசதிகள், அதனுடன் இணைந்த நுண்டகளும் பகுதிகளும். அமைவுகள்: கிழக்கு மேற்காக: வடக்கு பக்கம் 8 மீட்டர், தெற்கு பக்கம் வடிவமற்ற, தெற்கு வடக்காக: கிழக்கு பக்கம் 13.6 மீட்டர், மேற்கு பக்கம் 14 மீட்டர் மொத்தம் 100 சதுர மீட்டர். எல்லைகள்: வடக்கு: தெரு, கிழக்கு: கப்பலம்மன் வீட்டு மனை, மேற்கு: சாமிக்கண்ணு வீட்டு மனை, தெற்கு: பாண்டியாரு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 26.11.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 25.11.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 24.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ டினூன் - 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr. Prabhakaran (Mob: 74182 81709)) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பிட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் இ-ஏலத்தில் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 11.11.2026

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

THE BHARATHI CO-OPERATIVE SPINNING MILLS LTD., TNH 101,
Post Bag No. 1, Vilathikulam Road, ETTAYAPURAM – 628 902.
Phone : 04632 – 271260 / 04632 – 271332
TIN No. 33965880334/01.01.2007 CST No. 469267/03.11.1982
GST No.33AAAAT3204C1ZA - E-mail-bharathicoopspg@gmail.com

Ref.No. BCSM/Conversion Tender -1/2026-2027 Date: 04.11.2026

NOTICE INVITING TENDER FOR CONVERSION OF SINGLE CONE YARN INTO SINGLE HANK / DOUBLED CONE / DOUBLED HANK YARN.

E-Tenders in Two cover system (Online Technical Bid and Online Financial Bid through e-Procurement Portal) are invited from reputed firms for the Conversion of Single Cone Yarn into Single Hank Yarn / Double Cone / Hank Yarn for the Bharathi Co-operative Spinning Mills ltd., Ettayapuram , Thoothukkudi District,TamilNadu for a period of one year.

Sl. No.	Name of the work	Approximate Quantity	Required Earnest Money Deposit in (Rs.)	Tender Document availability on the portal	Date closing of e-submission of Technical and Financial bids	Date, time and place of opening of Technical Bids
1	Conversion of Single Cone Yarn into Single Hank Yarn/Double Cone/ Hank Yarn	800MT	1,00,000/-	12.11.2026 to 26.11.2026 upto 10.30 a.m	26.11.2026 upto 11.00 a.m	27.11.2026, 12.00 Noon at Bharathi Cooperative Spinning Mills Ltd., Ettayapuram.

The tender documents can be downloaded at free of cost from the Government website https://tntenders.gov.in. Eligibility of the Tenderer and other conditions are stipulated in the Tender Schedule.

DIPR/3487/Tender/2026 ADMINISTRATIVE OFFICER (IC), TENDER INVITING AUTHORITY.

கோயம்புத்தூர் மாவட்டம்
வெள்ளலூர் (சிறப்பு நிலை) பேரூராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.1197/2026 நாள்.05.11.2026

கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர் சிறப்புநிலை பேரூராட்சியில் முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கம் (CMIUDM) 2026-2027 திட்டத்தின் கீழ் ரூ.183.50 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளலூர் தர்சாலை அமைத்தல் பணிகள் மேற